பிப்ரவரி 25, 2011
வெள்ளிக்கிழமை

காரைக்குடி டைம்ஸ்

# சாய்ராம் கல்விக்குழுமத்தின் நாட்டு நலப்பணித் திட்ட 14வது இரத்தான முகாம்

சென்னை, பிப் 15, மேற்கு தாம்பரம்,. ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் (என்.எஸ்.எஸ்) அணி ஐ, ஐஐ சாய் ராம் பாலிடெக்னிக் கல்லூரி, மற்றும் சாய் ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி இணைந்து நடத்திய 14வது இரத்ததான முகாம் கடந்த 07.02.2011 திங்கட்கிழமை அன்று நடைபெற்றது. இந்த முகாமினை சாய்ராம் குழும கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து துவக்கி வைத்து அவர்களுடன் அவரும் ரத்த தானம் செய்தார். கல்லூரி இயக்குனர். ராஜமாணிக்கம் மாணவ, மாணவியர்களை ஊக்கமளிக்கும் வகையில் பேசினார்.

கல்லூரி முதல்வர் ஜெயக்குமார், பழனிக்குமார் மற்றும் எம்.பி.ஏ. இயக்குனர் மாறன் ஆகியோரு.ம் கலந்து கொண்டனர். இம்முகாமில் ஸ்ரீ இராமசந்திரா, கே.எம்.சி. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகள் லயன்ஸ் இரத்த வங்கி, குரோம்பேட்டை அரசு பொது மருத்துவமனை, ஜீவன் இரத்த வங்கி, எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக ரத்தவங்கி, அப்போலோ கான்ஸர் இன்ஸ்டிடியூட், ரெட் கிராஸ், வி.எச்.எஸ் அடையார் மற்றும் எழும்பூர் அரசு மகப்பேறு பொது மருத்துவமனை ஆகிய சுமார் 13 மருத்துவ குழுக்கள் கலந்து கொண்டன. மொத்தம் 1496 மாணவ, மாணவியரால் ஒரே நாளில் இரத்ததானம் செய்யப்பட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளாக சென்னையில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு இடையே ஒரே நாளில் அதிக அளவு எண்ணிக்கையில் இரத்த தானம் வாழங்கியதில் சாய் ராம் பொறியியல் கல்லூரி இரண்டாவது இடத்திற்கான பரிசை தொடர்ந்து பெற்று வந்துள்ளது. கடந்த வருடம் முதலிடத்தை பெற்றுள்ளது. இந்த மெகா ரத்ததான முகாமை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் உமா மகேஷ்வரன், சதிஷ் குமார் மற்றும் சித்ரா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சென்னை கோல்டன் சிட்டி அரிமா சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.